Sl. No. : 02124643

**SGSY**

பதிவு எண் | | | | | | | | |

# 2012

# பொது அறிவும் பொதுத் தமிழும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் ( Sl. No. ) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்:- தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் ( Sl. No. ) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 1 முதல் 100 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

**ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET**

வினாத் தொகுப்பின் இம்மேலுறையை கண்காணிப்பாளர் கூறும் வரையில் கிழிக்...
DO NOT TEAR THIS COVER ... BOOKLET UNTIL YOU ARE A...
இங்கே கிழிக்கவும்

101. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர்.

காரணம் (R) : ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம் செய்தி வாக்கியம்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

102. பிரித்து எழுதுக : சின்னாள்

A) சிறிய + நாள்

B) சில + நாள்

C) சின் + நாள்

D) சிறுமை + நாள்.

103. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்'

A) பசுங்காய் எது ?

B) நெல்லியம் - பொருள் கூறு.

C) நெல்லிக்காயின் குணம் என்ன ?

D) நெல்லிக்காயை என்ன செய்ய வேண்டும் ?

104. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) தமக்கு — மருத்துவர் தாம்

B) பழம் பகை — நட்பாதலில்

C) தம் கண்ணிற் — செய்யாறு மாணாவினை

D) பின்னின்னா — பேதையார் நட்பு.

105. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) கொடியாரை கொலையில் வேந்தொறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர்

B) கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர்

C) களைகட் டதனொடு வேந்தொறுத்தல் பைங்கூழ்

கொடியாரை கொலையில் நேர்

D) வேந்தொறுத்தல் பைங்கூழ் கொடியாரை கொலையில்

களைகட் டதனொடு நேர்.

106. பிரித்து எழுதுக : நன்னூல்

A) நன் + நூல்

B) நல்ல + நூல்

C) நன்மை + நூல்

D) நல் + நூல்.

107. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) தமிழுக்குத் தொண்டு செய்வோன் பாரதிதான்

சாவதில்லை தமிழ்த்தொண்டன் செத்ததுண்டோ !

B) தமிழ்தொண்டன் சாவதில்லை பாரதிதான்

செத்துதுண்டோ தமிழுக்குத் தொண்டு செய்வோன் !

C) தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ !

D) தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ !

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

108. 'மறவன்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) குடிப்பெயர்   B) கிளைப்பெயர்

C) காலப்பெயர்   D) சுட்டுப்பெயர்.

109. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"'உறுவினை காய்வோன் உயர்வு வேண்டடல் பொய்''

A) உயர்வு வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் ?

B) உறுவினை காய்வோன் யார் ?

C) காய்தல் நல்லதா ? கெட்டதா ?

D) யார் உயர்வை விரும்புவது பொய்யாகும் ?

110. 'நீடு துயில் நீக்க பாட வந்த நிலா' என்ற தொடரால் அழைக்கப் பெறுபவர்

A) பாரதிதாசன்   B) கவிமணி

C) பாரதியார்   D) புகழேந்திப் புலவர்.

111. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| *சொல்* | *பொருள்* |
| 1. பொலம் | அ. இரக்கம் |
| 2. வேரல் | ஆ. அழகு |
| 3. நொய்மை | இ. மூங்கில் |
| 4. செந்தண்மை | ஈ. மென்மை. |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | இ | ஆ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | ஈ | இ | ஆ | அ. |

112. எது உணர்ச்சி வாக்கியம் இல்லை ?

A) ஆ ! வானத்து விண்மீன்கள் என்னே அழகு !

B) ஐயோ ! பேரறிஞர் அண்ணா மறைந்தாரே !

C) உண்மைக்கு அழிவில்லை அல்லவா ?

D) ஆஹா ! தாஜ்மஹாலின் அழகே அழகு.

113. பட்டியல் **I** ஐ பட்டியல் **II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1. பை | அ. நுரை |
| 2. பூ | ஆ. அளவு |
| 3. பே | இ. கூர்மை |
| 4. மா | ஈ. பாம்பின் படம். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஆ | இ | அ | ஈ. |

114. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) கடலில் பெருங்காயம் கரைத்த போல

B) கடலில் பெருங்காயம் போல் கரைத்தல்

C) கடலில் கரைத்த பெருங்காயம் போல

D) பெருங்காயம் கரைத்த கடல் போல.

115. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) அறிவை விதைக்கும் களம் பள்ளியின் பாடநூல்கள் ஆகும்

B) பள்ளி என்பது பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களம் ஆகும்

C) பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களம் பள்ளி

D) அறிவை விதைக்கும் களமாக பள்ளியின் பாடநூல்கள் உள்ளன.

116. ஐந்திலக்கணம் பேசும் நூல்

A) நரிவிருத்தம் B) நன்னூல்

C) வீரசோழியம் D) வச்சணந்தி மாலை.

117. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்''

A) நன்றிக்கு வித்தாவது எது ?

B) நல்லொழுக்கம் நன்மை தருமா ?

C) நன்றி என்பது யாது ?

D) நல்லொழுக்கம் என்றால் துன்பமா ?

118. இலைமறை காய் போல

A) வேதம் B) மறைபொருள்

C) நெருக்கம் D) இரகசியம்.

119. 'இன்ப மிகுதி' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) பாலோடு சர்க்கரை கலந்தது

B) பாலோடு பழம் கலந்தது போல

C) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல

D) பாலோடு தேன் கலந்தது.

120. பிரித்து எழுதுக : வெற்றிலை

A) வெற்றி + இலை

B) வெறு + இலை

C) வெறுமை + இலை

D) வெற்று + இலை.

121. வேளாண்மை வேதம் எனப்படுவது

A) இனியவை நாற்பது

B) முதுமொழி

C) ஏலாதி

D) நாலடியார்.

122. வீரயுகப் பாடல்கள் என்ற சிறப்புக்குரிய நூல் எது ?

A) அகநானூறு

B) சங்க இலக்கியம்

C) குறுந்தொகை

D) திருக்குறள்.

123. 'செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்குஅரிய செய்கலா தார்' - தவறான கூற்றைச் சுட்டுக

A) அடி இயைபு மட்டும் வந்துள்ளது

B) அடி எதுகை சீர் எதுகை வந்துள்ளது

C) அடிமோனை சீர்மோனை வந்துள்ளது

D) அடி இயைபு சீர்இயைபு வந்துள்ளன.

124. பட்டியல் **I** ஐ பட்டியல் **II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1. | உழைப்பின் வாரா | அ. | உணவு முறை அமைய வேண்டும் |
| 2. | உழைப்பிற்குத் தகுந்த | ஆ. | உடம்பை வளர்ப்போம் |
| 3. | உடற்பயிற்சி செய்தால் | இ. | உறுதிகள் உளவோ ? |
| 4. | உடற்கல்வி பெற்று | ஈ. | உடல்நலம் பெறும். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | ஆ | அ |
| B) | இ | அ | ஆ | ஈ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | அ | ஈ | இ | ஆ. |

125. தவறான சொற்றொடரை நீக்குக :

A) யாதும் ஊரே யாவரும் கேளிர்

B) பக்கம் பார்த்து அக்கம் பேசு

C) பதறிய காரியம் சிதறிப் போகும்

D) கழுதை அறியுமா ? கற்பூர வாசனை.

126. 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி

ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்'

- இப்பாடலடிகளில் அடியியைபைச் சுட்டுக.

A) வானாகி — மண்ணாகி

B) வளியாகி — ஒளியாகி

C) வானாகி — ஊனாகி

D) ஊனாகி — உயிராகி.

127. 'இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் இடும்பைக்கு

இடும்பைப் படாஅ தவர்' - குறளில் அமைந்துள்ளவாறு பொருத்தமானதைக் குறியிடு :

A) முற்று மோனை அமைந்துள்ளது

B) முற்று எதுகை அமைந்துள்ளது

C) முற்று இயைபு அமைந்துள்ளது

D) இவை அனைத்தும்.

128. 'கல்லாஅ ஒருவனை அனுப்பிச் செயல்புரிந்திடும்

எல்லாஅ வல்ல இறைவனை ஏத்துவாம்' - இப்பாடலடிகளில் கண்டுள்ளவாறு பின்வருவனவற்றுள் சரியான விடையை சுட்டுக :

A) அடிஎதுகை வந்துள்ளது

B) சீர்எதுகை வந்துள்ளது

C) அடிஇயைபு அமைந்துள்ளது

D) இவை அனைத்தும்.

129. அயற்கூற்று குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது ?

A) ஒரு முதன்மை வாக்கியம் ஒரு துணை வாக்கியத்துடன் சேர்ந்து வரும்

B) ஒருவர் கூறியதை அப்படியே கூறாமல் அயலார் கூறுவதுபோல் கூறுவதில் மேற்கோள் குறியீடு இடம் பெறாது. தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயரில் மாறி அமையும்

C) வினாப்பொருள் தரும் வாக்கியம்

D) ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம்.

130. தவறான சொற்றொடரை நீக்குக :

A) நட்பாக இருந்தவன் பகைவனாக மாறினான்

B) மணிமேகலை மேற்கண்டாள் துறவு வாழ்க்கை

C) யானைவரும் பின்னே மணியோசை வரும் பின்னே

D) காலையில் கதிரொளி கேணியில் கொட்டியது.

131. எது நேர்க்கூற்று ?

A) 'நான் பரிசு வாங்கி வருவேன்' என்று சீதா லதாவிடம் கூறினாள்

B) மறுநாள் தான் மதுரை செல்வதாக பாரதி கூறினான்

C) ஐயோ ! பேரறிஞர் அண்ணா மறைந்தாரே !

D) வனஜா, கிரிஜாவிடம் தான் புத்தகம் கொண்டு வருவதாகக் கூறினாள்.

132. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'ஏவல் வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்

உழுவா னுலகுக் குயிர்'

A) ஏவல் வழுவான் யார் ?

B) ஏவல் வழுவினால் என்ன ஆகும் ?

C) உலகினுக்கு உயிர் யார் ?

D) உழுபவன் என்ன செய்கிறான் ?

133. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : ஆ ! வானத்து விண்மீன்கள் என்னே அழகு !

காரணம் *(R)* : மகிழ்ச்சி, துன்பம், வியப்பு, உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுமாறு அமைவது உணர்ச்சி வாக்கியம்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) *(A)* தவறு ஆனால் *(R)* சரி

B) *(A)* மற்றும் *(R)* இரண்டும் சரி, மேலும் *(R)* என்பது *(A)* விற்கு சரியான விளக்கம்

C) *(A)* மற்றும் *(R)* இரண்டும் சரி மேலும் *(R)* என்பது *(A)* விற்கு சரியான விளக்கமல்ல

D) *(A)* சரி, ஆனால் *(R)* தவறு.

134. 'கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை

விடாஅர் விழையும் உலகு' - இக்குறளின்படி சீர் எதுகைக்கும் சீர் மோனைக்கும் பொதுவானது

A) கெடாஅ — விடாஅர்

B) விடார் — வழிவந்த

C) விடாஅர் — விழையும்

D) கேண்மையார் — கேண்மை.

135. 'அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்

புறத்த புகழும் இல' - இக்குறளில் அடி எதுகையாக அமைந்தது

A) அறத்தான் — வருவதே

B) புறத்த — புகழும்

C) அறத்தான் — புறத்த

D) அறத்தான் — மற்றெல்லாம்.

136. **பட்டியல் I** ஐ **பட்டியல் II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1. ஆ | அ. அம்பு |
| 2. ஏ | ஆ. இரக்கம் |
| 3. ஐ | இ. பசு |
| 4. ஒ | ஈ. அழகு. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | அ | ஈ | ஆ |
| B) | அ | இ | ஆ | ஈ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | ஈ | இ | அ | ஆ. |

137. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக :

A) ஔவையார் மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடினார்

B) மூவேந்தர்கள் ஔவையாரால் புகழ்ந்து பாடப்பட்டனர்

C) மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடினார் ஔவையார்

D) ஔவையார் மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடினாரா ?

138. பட்டியல் **I** ஐ பட்டியல் **II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| 1. குழந்தைக்கு தாய் உணவு ஊட்டினாள் | அ. எதிர்மறைத் தொடர் |
| 2. தாயால் குழந்தைக்கு உணவு ஊட்டப்பட்டது | ஆ. பிறவினை |
| 3. தாய் உணவு உண்டாள் | இ. செயப்பாட்டு வினை |
| 4. தாய் குழந்தைக்கு உணவு ஊட்டவில்லை | ஈ. தன்வினை. |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஆ | இ | ஈ | அ |
| C) | ஈ | அ | ஆ | இ |
| D) | இ | ஈ | அ | ஆ. |

139. பிறவினைச் சொற்றொடரை கண்டறிக :

A) எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்

B) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

C) எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது

D) எழிலரசி சிலப்பதிகாரம் கல்லார்.

140. பட்டியல் **I** ல் உள்ள நூல்களை **பட்டியல் II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** *நூல்* | **பட்டியல் II** *நூலாசிரியர்* |
|---|---|
| 1. நளவெண்பா | அ. முனைப்பாடியார் |
| 2. நைடதம் | ஆ. புகழேந்தி |
| 3. அறநெறிச்சாரம் | இ. குமரகுருபரர் |
| 4. சகலகலாவல்லி மாலை | ஈ. அதிவீரராம பாண்டியர். |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | அ | இ |
| B) | ஆ | இ | ஈ | அ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | ஈ | அ | ஆ | இ. |

141. பட்டியல் I ல் உள்ள நிலங்களை பட்டியல் II-ல் உள்ள தெய்வங்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| *நிலம்* | | *தெய்வம்* | |
| 1. | குறிஞ்சி | அ. | வருணன் |
| 2. | முல்லை | ஆ. | இந்திரன் |
| 3. | மருதம் | இ. | முருகன் |
| 4. | நெய்தல் | ஈ. | திருமால். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | இ | அ | ஈ | ஆ. |

142. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) புவி — ஞாலம்

B) இகல் — பகை

C) விரை — தளர

D) அல் — இருள்.

143. பிரித்து எழுதுக : காட்டுக்கோழி

A) காட்டு + கோழி
B) காடு + கோழி
C) கா + கோழி
D) கான் + கோழி.

144. பிரித்து எழுதுக : முன்னரண்

A) முன் + அரண்
B) முன்பு + அரண்
C) முன்னர் + அரண்
D) முள் + அரண்.

145. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) முல்லைப்பாட்டு — மதுரைக்காஞ்சி

B) இன்னா நாற்பது — பட்டினப்பாலை

C) இன்னிலை — பழமொழி

D) தமிழ்மறை — நான்மணிக் கடிகை.

146. கீழ்க்காணும் பாடலிலிருந்து எடுக்கப்பட்ட சொற்களுள் எது எதிர்ச்சொல் இல்லை ?

'மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்

உயர்நெடுங்குன்றம் படுமழை தலைஇச்

சுரநனி இனிய ஆகுக தில்ல;

அறநெறி இதுவெனத் தெளிந்த என்,

பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே'

A) உயர்நெடுங்குன்றம் × குன்று

B) சுரம் × பாலை

C) அறநெறி × தீநெறி

D) இனிய × இன்னாத.

147. 'பயில்' — என்னும் வேர்சொல்லின் வினைமுற்றை காண்க.

A) பயின்ற

B) பயின்று

C) பயிலல்

D) பயின்றான்.

148. 'நல்லவாய் நாடி நடக்குமாம் இல்லார்க்கு' - என்னும் அடியில் 'நாடி' என்னும் சொல்லின் வினைமுற்று எது ?

A) நாடுதல்

B) நாடு

C) நாடியவன்

D) நாடினான்.

149. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) அவகாசம் — நாள் தள்ளீடு

B) சமுகதீர்வு — அமைப்பு

C) மகாசபை — பேரவை

D) மகஜர் — விண்ணப்பம்.

150. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) அரி — திரும்பல்

B) உரம் — சக்தி

C) ஒதி — கலங்கி

D) கவி — கிழமை.

151. 'துற' என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் எழுதுக.

A) துறப்ப

B) துறந்து

C) துறத்தல்

D) துறந்தான்.

152. Mole : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) அணுத்திரண்மம்

B) நுண்கூறு

C) அலைதாங்கி

D) சிறுதுணுக்கு.

153. பட்டியல் I ஐ பட்டியல் II-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1. பொருட்பெயர் | அ. கொங்கன் |
| 2. இடப்பெயர் | ஆ. ஈவான் |
| 3. தொழிற்பெயர் | இ. அந்தணன் |
| 4. பண்புப்பெயர் | ஈ. அத்திகோசத்தான். |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | ஈ | ஆ | இ | அ |
| D) | இ | அ | ஆ | ஈ. |

154. 'வினைத்தொகை' - என்பதன் சரியான இலக்கண விளக்கம் தேர்க :

A) மூன்று காலமும் மறைந்து பொருந்தி வரும்

B) இறந்த காலம் நிகழ்காலம் மறைந்து பொருந்தி வரும்

C) எதிர்காலம் மட்டும் மறைந்து பொருந்திவரும்

D) காலத்தை உணர்த்தாது வரும்.

155. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான இலக்கணக் குறிப்புகளில் வரிசை மாறாத சரியான இணையைத் தேர்வு செய்க :

கருநிறம், குருநிறம்

A) பண்புத்தொகை, பண்புத்தொகை

B) பண்புத்தொகை, வினைத்தொகை

C) பண்புத்தொகை, உரிச்சொல் தொடர்

D) வினைத்தொகை, உரிச்சொல் தொடர்.

156. 'கல்' என்னும் வேர்ச்சொல் எந்த இலக்கணத்தோடு சரியாக பொருந்தியுள்ளது ?

A) கல்-கற்றான் — வினையெச்சம்

B) கல்-கற்றான் — வினைமுற்று

C) கல்-கற்றான் — தொழிற்பெயர்

D) கல்-கற்றான் — பெயரெச்சம்.

157. 'பார்குலாம்' என்ற பெயர்ச்சொல்லின் வகையில் எது சரியானது ?

A) குணப்பெயர்

B) இடப்பெயர்

C) தொழிற்பெயர்

D) சினைப்பெயர்.

158. மருத நிலமக்களின் 'நந்தா விளக்கம்' எனும் அடைமொழியால் வழங்கும் நூல் யாது ?

A) உலா

B) பள்ளு

C) பிள்ளைத்தமிழ்

D) கலம்பகம்.

159. குறிஞ்சிக்கு .................. என இவரைக் கூறுவர்.

A) பரணர்
B) கம்பர்
C) கபிலர்
D) குமரகுருபரர்.

160. 'செல்' என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்க :

A) சென்ற
B) சென்று
C) சென்றவன்
D) சென்றான்.

161. குட்டித் தொல்காப்பியம் எனக் கூறப்படும் நூல் எது ?

A) பிரயோக விவேகம்
B) தொன்னூல் விளக்கம்
C) இலக்கண விளக்கம்
D) பிரபந்த தீபிகை.

162. சொற்களுக்கான இலக்கணக் குறிப்புகளில் வரிசை மாறாத சரியான இணையைத் தேர்வு செய்க :

நீர்வேலி, ஒரு தனி

A) வினைத்தொகை, ஒருபொருட் பன்மொழி
B) உருவகம், ஒருபொருட் பன்மொழி
C) பண்புத்தொகை, ஒருபொருட் பன்மொழி
D) பண்புப் பெயர், ஒருபொருட் பன்மொழி.

163. 'மாட்சி' என்ற பெயர்ச்சொல்லின் வகை அறிக :

A) தொழிற்பெயர்
B) பண்புப்பெயர்
C) வினையாலணையும் பெயர்
D) காலப்பெயர்.

164. பட்டியல் **I** ல் உள்ள ஆசிரியர்களை **பட்டியல் II**-ல் உள்ள சிறப்புப் பெயர்களுடன், கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| *ஆசிரியர்கள்* | *சிறப்புப் பெயர்கள்* |
| 1. ஒட்டக்கூத்தர் | அ. திவ்விய கவி |
| 2. திருநாவுக்கரசர் | ஆ. பாவலர் மணி |
| 3. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் | இ. கவிராட்சசன் |
| 4. வாணிதாசன் | ஈ. வாகீசர். |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | ஆ | இ | ஈ | அ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஈ | அ | ஆ | இ |
| D) | அ | இ | ஈ | ஆ. |

165. இராமாயணத்தில் 'சுந்தரன்' என்னும் பெயரால் அழைக்கப்படுபவர்

A) இராமன்

B) அனுமன்

C) இலக்குவன்

D) விபீடணன்.

166. இவற்றுள் எத்தொடர் சரியானது ?

A) உச்சிமேற் புலவர்கொள் இளம்பூரணர்

B) உச்சிமேற் புலவர்கொள் சேனாவரையர்

C) உச்சிமேற் புலவர்கொள் மயிலைநாதர்

D) உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்.

167. Hypocrisy : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தவறான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) கபட நாடகம்

B) கபாடம்

C) கபடம்

D) பாசாங்கு.

168. ‘துண்டு’ என்ற அடைமொழியால் குறிக்க பெறும் நூல் யாது ?

A) ஆசாரக் கோவை

B) நான்மணிக்கடிகை

C) இனியவை நாற்பது

D) சீவகசிந்தாமணி.

169. ‘ஓங்கு’ எனும் அடைமொழி கொண்ட நூல் யாது ?

A) கலித்தொகை

B) பரிபாடல்

C) அகநானூறு

D) குறுந்தொகை.

170. Cellphone : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தவறான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) தொலைபேசி

B) அலைபேசி

C) கைபேசி

D) செல்பேசி.

171. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

‘கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்’

A) கணவனை இழந்தோர் யார் ?

B) கணவனை இழந்தோர்க்கு என்ன நேர்கிறது ?

C) யாருக்கு ஆறுதல் கூற இயலாது ?

D) இல் என்பதன் பொருள் யாது ?

172. 'அண்ணி' — என்பதன் பெயர்ச்சொல்லின் வகை அறிக

A) குடிப்பெயர்

B) கிளைப்பெயர்

C) காலப்பெயர்

D) சுட்டுப்பெயர்.

173. உரையாசிரியச் சக்கரவர்த்தி எனப் போற்றப்படுபவர்

A) கதிரேசச் செட்டியார்

B) மறைமலை அடிகள்

C) எஸ். வையாபுரிப்பிள்ளை

D) மு. கோபாலகிருஷ்ணமாச்சாரி.

174. பட்டியல் **I** ஐ பட்டியல் **II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் **I** | பட்டியல் **II** |
|---|---|
| 1. ஒழி | அ. தடி |
| 2. கழி | ஆ. நீக்கு |
| 3. ஒளி | இ. மகிழ்ச்சி |
| 4. களி | ஈ. வெளிச்சம். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | ஈ | இ |
| B) | இ | ஆ | அ | ஈ |
| C) | ஈ | ஆ | அ | இ |
| D) | அ | இ | ஆ | ஈ. |

175. பட்டியல் **I** ல் உள்ள தாவரங்களை பட்டியல் **II**-ல் உள்ள உறுப்புகளுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| *தாவரம்* | | *உறுப்பு* | |
| 1 | தாழை | அ. | ஓலை |
| 2. | மா | ஆ. | மடல் |
| 3. | வேப்பம் | இ. | இலை |
| 4. | தென்னை | ஈ. | தழை. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | இ | ஈ | அ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஆ | ஈ | இ | அ |
| D) | அ | ஆ | ஈ | இ. |

176. நீரோட்டக யமக அந்தாதி - நூலின் சிறப்பு யாது ?

A) சிலேடையில் பாடுவது

B) இதழ்கள் ஒன்றோடொன்று பொருந்தாமல் வரும் சொற்களை அமைத்துப் பாடுவது

C) மழையினை ஏற்படுத்துவது

D) உவமை, அலங்காரங்களில் தனிச்சிறப்புடையது.

177. மாதானுபங்கி என பெயருடையவர் யார் ?

A) திருமங்கையாழ்வார்

B) நக்கீரர்

C) திருவள்ளுவர்

D) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

178. பிரித்து எழுதுக : தாதூதி

A) தா + தூது + ஊதி B) தா + ஊதி

C) தாது + தூது + ஊதி D) தாது + ஊதி.

179. பொருந்தாத இணையைக் கண்டறிக :

A) Redo — மீண்டும் செய்

B) Recur — திரும்பவும் நிகழ்

C) Rectum — மலக்குடல்

D) Rectal — சரிக்கட்டக்கூடிய.

180. 'கூத்தராற்றுப்படை' எனும் அடைமொழியால் அழைக்கப்படும் நூல் யாது ?

A) முல்லைப்பாட்டு B) குறிஞ்சிப்பாட்டு

C) மலைபடுகடாம் D) பட்டினப்பாலை.

181. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| *சொல்* | *பொருள்* |
| 1. நட்டோர் | அ. அருகில் |
| 2. நணி | ஆ. படுக்கை |
| 3. பாயல் | இ. வலிமை |
| 4. மதுகை | ஈ. நண்பர். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | இ | அ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | அ | ஈ | ஆ | இ. |

182. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே'

A) வள்ளுவனைப் பெற்றது யார் ?

B) வையகம் யாரைப் பெற்றது ?

C) வையகம் புகழ்பெற்றது எதனால் ?

D) வையகம் பெற்ற புகழ் எது ?

183. 'ஆற்றீர்' - வேர்ச்சொல்லை தேர்வு செய்

A) ஆற்றி

B) ஆற்றிய

C) ஆற்று

D) ஆற்றுதல்.

184. பின்ருவனவற்றுள் மோனைத் தொடைக்குத் தொடர்பில்லாதது எது ?

A) முதலெழுத்து ஒன்றி வருவது

B) இரண்டாவது எழுத்தும் ஒன்றி வருவது

C) முதல் எழுத்து இனவெழுத்தாக இருப்பது

D) அடிகளிலும் சீர்களிலும் அமையக் கூடியது.

185. சரியாக பொருந்தியுள்ளது எது ?

| | | | |
|---|---|---|---|
| A) | செந்தாமரை வந்தாள் | — | உவமைத்தொகை |
| B) | நீர்வேலி | — | உருவகம் |
| C) | குணமிலார் | — | பண்புத்தொகை |
| D) | குருநிறம் | — | உரிச்சொற்றொடர். |

186. பட்டியல் I ஐ பட்டியல் II-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1. | சிற்பியால் சிற்பம் செதுக்கப்பட்டது | அ. | வினா வாக்கியம் |
| 2. | சிற்பி சிற்பத்தைச் செதுக்கினார் | ஆ. | உணர்ச்சி வாக்கியம் |
| 3. | சிற்பி சிற்பத்தைச் செதுக்குவாரா ? | இ. | செயப்பாட்டு வினை |
| 4. | என்னே ! சிற்பியின் கை வண்ணம் ! | ஈ. | செய்வினை. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | அ | இ | ஆ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஆ | ஈ | அ | இ |
| D) | அ | ஆ | இ | ஈ. |

187. பட்டியல் I ஐ பட்டியல் II-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1. | ஆர | அ. | தணிய |
| 2. | ஆற | ஆ. | நிறைய |
| 3. | ஊர | இ. | சுரக்க |
| 4. | ஊற | ஈ. | நகர. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஆ | இ | ஈ | அ |
| C) | இ | ஆ | அ | ஈ |
| D) | ஆ | அ | ஈ | இ. |

188. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | *குரவர்* | *குறவர்* |
|---|---|---|
| A) | குலம் | புலவர் |
| B) | ஆசிரியர் | ஓர் இனத்தார் |
| C) | புலவர் | குலம் |
| D) | ஓர் இனத்தார் | புரவலர். |

189. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | *வலை* | *வளை* | *வழை* |
|---|---|---|---|
| A) | சிலந்தி வாழிடம் | துவாரம் | புன்னை மரம் |
| B) | எலி வாழிடம் | பள்ளம் | வாழை மரம் |
| C) | நண்டு வாழிடம் | குழி | தென்னை மரம் |
| D) | ஆமை வாழிடம் | கடல் | பனை மரம். |

190. 'இயைந்தவர்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) இயைந்த

B) இயை

C) இயைந்து

D) இயைதல்.

191. 'கற்றவன்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) கற்க

B) கற்று

C) கல்

D) கள்.

192. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க :

A) புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

B) புரட்சிப் பூக்கள் பூத்து குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

C) புரட்சி பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்

D) புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றினார்.

193. வழூஉச் சொற்கள் நீக்கிய வாக்கியத்தை தேர்வு செய்க :

A) புண்ணாக்கு விற்பனையில் பதட்டம் அடைந்தான்

B) பிண்ணாக்கு விற்பனையில் பதட்டம் அடைந்தான்

C) வேர்வை சிந்த சுவற்றில் ஏறினான்

D) வியர்வை சிந்த சுவரில் ஏறினான்.

194. பட்டியல் **I** ல் உள்ள சொற்களை பட்டியல் **II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| *சொல்* | | *பொருள்* | |
| 1. | புயல் | அ. | உணவு |
| 2. | புரை | ஆ. | வஞ்சனை |
| 3. | சலம் | இ. | குற்றம் |
| 4. | துப்பு | ஈ. | மேகம். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | இ | ஆ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | ஆ | அ | ஈ | இ |
| D) | இ | ஆ | அ | ஈ. |

195. பட்டியல் **I** ல் உள்ள நூல்களை பட்டியல் **II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I<br>*நூல்* | | பட்டியல் II<br>*நூலாசிரியர்* | |
|---|---|---|---|
| 1. | திருக்குற்றாலக் குறவஞ்சி | அ. | புலவர் குழந்தை |
| 2. | இராவண காவியம் | ஆ. | குமரகுருபரர் |
| 3. | மீனாட்சியம்மைக் குறம் | இ. | இரட்டைப்புலவர் |
| 4. | தில்லைக்கலம்பகம் | ஈ. | திரிகூடஇராசப்பக்கவிராயர். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | அ | ஆ | இ |
| B) | அ | ஈ | இ | ஆ |
| C) | ஈ | ஆ | அ | இ |
| D) | இ | ஆ | அ | ஈ. |

196. 'பழிநாணுவானை' - பெயர்சொல்லின் வகையறிக :

A) தொழிற்பெயர்

B) பண்புப்பெயர்

C) பொருட்பெயர்

D) வினையாலணையும் பெயர்.

197. பட்டியல் **I** ஐ பட்டியல் **II**-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1. | புரட்சிக்கொடி திருக்குறள் கற்றாள் | அ. | பிறவினைச் சொற்றொடர் |
| 2. | புரட்சிக்கொடி திருக்குறள் கற்பித்தாள் | ஆ. | செயப்பாட்டு வினைச்சொற்றொடர் |
| 3. | புரட்சிக்கொடியால் திருக்குறள் கற்பிக்கப்பட்டது | இ. | தன்வினைச் சொற்றொடர் |
| 4. | புரட்சிக்கொடி திருக்குறள் கல்லார் | ஈ. | எதிர்மறைத் தொடர். |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | இ | அ | ஆ | ஈ |
| D) | ஆ | ஈ | அ | இ. |

198. பட்டியல் **I** ல் உள்ள நிலங்களை பட்டியல் **II**-ல் உள்ள சிறுபொழுதுகளுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| | *நிலம்* | | *சிறுபொழுது* |
| 1. | குறிஞ்சி | அ. | மாலை |
| 2. | முல்லை | ஆ. | வைகறை |
| 3. | மருதம் | இ. | ஏற்பாடு |
| 4. | நெய்தல் | ஈ. | யாமம். |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | இ | அ |
| B) | இ | ஆ | அ | ஈ |
| C) | அ | இ | ஈ | ஆ |
| D) | ஈ | அ | ஆ | இ. |

199. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| *சொல்* | | *பொருள்* | |
| 1. | கணம் | அ. | வருந்துதல் |
| 2. | மொய்ம்பு | ஆ. | விருப்பம் |
| 3. | அலமரல் | இ. | வலிமை |
| 4. | வேள் | ஈ. | கூட்டம். |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | ஈ | இ |
| B) | ஆ | ஈ | இ | அ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | ஈ | அ | இ | ஆ. |

200. பின்வருவனவற்றுள் வீரமாமுனிவர் எழுதாத நூல் எது ?

A) சத்திய வேத கீர்த்தனை

B) திருக்காவலூர்க் கலம்பகம்

C) அழுங்கல் அந்தாதி

D) அடைக்கல மாலை.